செ.வெ.எண்: 33 நாள்: 20.12.2016

**தமிழகஅரசின் வருவாய்த்துறையின் மூலம் வழங்கப்படும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை பொதுமக்கள் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் வட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் மற்றும் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (20.12.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பணிகள் மற்றும் பதிவேடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தும், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி கூறியதாவது:

தமிழகஅரசு வருவாய்த்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இதன்படி பொதுமக்களுக்கு தேவையான பல்வேறு சான்றிதழ்கள் மற்றும் முக்கிய பணிகளை வட்டாட்சியர் அலுவலகம் மூலம் மேற்கொள்ள உத்தரவிட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் ஆவுடையார்கோவில் வட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகள் மற்றும் பணிகள் குறித்தும் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இதில் வட்டாட்சியர் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தகவல் அறியும் உரிமைச்சட்டம் பதிவேடு, வருகைப்பதிவேடு, குடும்பத்தலைவர் மாற்றம் பதிவேடு, இறப்பு சான்று பதிவேடு, தற்செயல் விடுப்பு பதிவேடு, வருகைப்பதிவேட்டின் சுருக்கப்பதிவேடு, கோப்புகள் வழங்கும் பதிவேடு, அலுவலகப்பணியாளர்களின் காலமுறை ஊதிய உயர்வு பதிவேடு, இணையதளத்தின் மூலம் வழங்கப்பட்ட சான்றுகள் பதிவேடு, நிலவரி வசூல் பதிவேடு, முன்கொணர் பகிர்மானப்பதிவேடு உள்ளிட்ட பல்வேறு பதிவேடுகள் மற்றும் பணிகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. மேலும் 7 பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகைக்கான ஆணைகளும், 12 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகளும் வழங்கப்பட்டது.

இந்த ஆய்வின் போது அலுவலகங்களில் உள்ள அனைத்து பதிவேடுகளையும் முறையாக பராமரிக்கவும், அனைத்து வருவாய்த்துறை அலுவலர்களும் தங்களது தொடர்புடைய பணிகளை சிறப்பாக மேற்கொள்ளவும், மேலும் பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் மனுக்களின் மீது உரிய விசாரணை மேற்கொண்டு உடனடி நடவடிக்கை மேற்கொள்வதுடன் சான்றிதழ்களை தாமதமின்றி வழங்கவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் தமிழகஅரசின் வருவாய்த்துறையின் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் பல்வேறு நலத்திட்ட உதவிகளை அனைவரும் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வில் வட்டாட்சியர் திருமதி.பவானி மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**